4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **434/2019** நாள்: **14.08.2025** வா.சா.1 – மனோஜ்குமார்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **2**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

2ம் வாதி கிருஷ்ணவேணி எனது தங்கை. 3ம் பிரதிவாதி துரைசாமி எனது தகப்பனார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பழனிசாமி எனது தந்தை வழி பாட்டனார் என்றால் சரிதான். ரத்தினசாமி எனது தந்தையின் உடன் பிறந்த சகோதரர். பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் 1/9 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து எனது பாட்டானாரும், அவருடைய சகோதரரும், அவருடைய தகப்பனாரும் செய்து கொண்ட பாகபிரிவினையின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான். மேற்படி எனது தாத்தா 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய சகோதரர்களுக்கும் இடையே 1974 ல் பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது. மேற்படி 1974 ம் வருட பாகபிரிவினை ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1974 ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரப்படி தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 20.08.2004 தேதியன்று எனது பாட்டனார் 1ம் பிரதிவாதி அவரது மகன்களான 2 மற்றும் 3 பிரதிவாதிகளுடன் ஒரு பாகபிரிவினை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 20.08.2004 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் பற்றி எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எனக்கு 24 வயதிருக்கும் போது தெரியவந்தது. எப்படி எனக்கு தெரிய வந்தது என்றால் தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்க்கும் போது தெரியவந்தது. 2017 ம் வருடம் வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன். 2017 ம் வருடம் வில்லங்க சான்றிதழ் பார்த்த போது 20.08.2004 அன்று நடைபெற்ற பாகபிரிவினை பத்திரத்தில் எனது தந்தையான 3ம் பிரதிவாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சேர்த்து கொண்டம்பட்டி கிராமத்தில் சர்வே எண். 376/1சி யில் 4.70 ஏக்கரும், 376பி யில் தடபூமி 6 ¾ செண்ட் அதாவது மொத்தம் 4.76 ¾ செண்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிராமத்தில் சர்வே எண். 376/1சி யில் 4.49 ஏக்கரும், 376/3பி யில் 20 செண்ட்டும், 376/1பி யில் 6 ¾ செண்டும், 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது தந்தைக்கும், 1ம் பிரதிவாதியான எனது

பாட்டனாருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தை எனது தந்தை 1ம் பிரதிவாதியிடம் உரிய பணம் கொடுத்து 2009 ம் வருடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்கிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான், 2017 ம் வருடம் பார்த்தேன். எனது பாட்டனாருக்கு 1974 ல் பாகம் ஒதுக்கிய பிறகு அவருக்கு பாகமாக கிடைத்த சொத்தை பொறுத்து பலமுறை அடமானம் வைத்து பணம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2009 ம் ஆண்டு 1ம் பிரதிவாதியிடமிருந்து விடுதலை பத்திரம் வாங்கிய பிறகு எனது தந்தை பல முறை விடுதலை பத்திரம் வாங்கிய சொத்தை வங்கியில் அடமானம் வைத்து பணம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல, 2017 ம் ஆண்டுக்கு பிறகு வாங்கியுள்ளார். எனது தந்தை விடுதலை பத்திரம் எழுதி வாங்கிய பிறகு வைத்த அடமானம் தற்போதும் நிலுவையில் உள்ளதா என்றால் சாட்சி 2024 ம் வருடம் அடமானத்தை எனது தந்தை மீட்டுவிட்டார் என்று கூறுகிறார். எனது தந்தைக்கு வங்கியில் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் கொடுக்க கூடாது என்று நான் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். நான் RBL வங்கிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன். மேற்படி வங்கி ராசக்கபாளையத்தில் உள்ளது. நான் வங்கிக்கு அனுப்பிய அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கின் சொத்து விவரம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் 1974 வருட பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். தாவா சொத்து ஏற்கனவே உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பட்டயபடிப்பு படித்துள்ளேன். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேன். 2004 ல் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் அவர் தற்போது வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும் எனது தகப்பனாருக்கும் இடையே விரோதம் உண்டு. எனது தந்தை எனக்கு பூர்வீக சொத்தின் பாகத்தை தரமுடியாது என்று சொன்னதால் எங்களுக்குள் விரோதம். எனது தாயாரை அவருடைய பெற்றோர் வீட்டிற்கு எங்களோடு அனுப்பி வைத்துவிட்டார். எனக்கும், எனது தந்தைக்கும் உள்ள விரோதத்தையும், எனது தாயாரை அவர் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிய விவரத்தையும் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு வழக்குரையில் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்ள வீட்டில் நானும், எனது தாயாரும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வாதிகள் நாங்களும், எனது தாயாரும் சேர்ந்து பிரதிவாதிகள் மீது

உடுமலைபேட்டை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.123/2018 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அதனுடைய வழக்குரை என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்று சொன்னால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.123/2018 ல் உள்ள தாவா சொத்து எது என்றால் 1974 ல் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். அசல் வழக்கு எண்.123/2018 வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். மேற்படி அசல் வழக்கு எண்.123/2018 வழக்கில் அதில் உள்ள தாவா சொத்தில் பாகம் இருப்பதாக நாங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண்**.123/2018** ன் வழக்குரை நகல் பி.சா.ஆ**.1** ஆகும். 1974 ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தில் 1ம் பிரதிவாதியான எனது பாட்டனாருக்கு கொண்டம்பட்டி கிராமம் சர்வே எண்.426 ல் பு.ஏ.5.88 ஏக்கர் பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வல்லக்குண்டாபுரம் கிராமத்தில் சர்வே எண்.592/6 ல் 6.50 செண்ட் காலிமனை எனது பாட்டனாரான 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துக்களும் 2004 ல் ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது என்று சாட்சி கூறுகிறார். 30.03.2017 அன்று 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு ஆயுள் பாத்தியமும், அதன் பின்னிட்டு 2ம் பிரதிவாதியின் மகன் அன்பரசுக்கு சர்வே எண்.592/6 மற்றும் 426 ஆகியவற்றில் உள்ள சொத்துக்களை கிடைக்க வேண்டும் என்று ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி விவரங்களை தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு உயில் சாசனம் எழுதி வைக்க அருகதை இல்லை என்று குறிப்பிட்டு நாளது தேதி வரை எந்தவொரு பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி காலமான பிறகு 30.03.2017 தேதியிட்ட உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்தது என்று சொன்னால் சரியல்ல. கொண்டம்பட்டி சர்வே எண்.426 ல் பவர் கிரிட் கார்பரேசன் நிறுவனத்தின் கோபுரம் அமைக்கப்பட்டு மின் கம்பிகள் அமைக்கப்பட்டு வேலைகள் தொடர்ந்து நடைபெறுகிறது என்றால் சரிதான். மேற்படி கோபுரம் அமைப்பது சம்பந்தமாக 2ம் பிரதிவாதிக்கு பவர் கிரிட் கார்பரேசன் எவ்வளவு தொகை இழப்பீடாக வழங்கியது என்று எனக்கு தெரியாது. மேற்படி பவர் கிரிட் கார்பரேசன் இழப்பீடு தொகையை இரண்டாவது பிரதிவாதிக்கு வழங்ககூடாது என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.426 ல் நாங்கள் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.426 ல் நானும், எனது தாயாரும் குடியிருந்து வருவதாக அசல் வழக்கு எண்.123/2018

வழக்கில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் குடியிருப்பதற்கு என்ன உள்ளது என்றால் கட்டிட அறை உள்ளதாக சாட்சி கூறுகிறார். என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் கதவு இல்லாத ரூமில் தான் நானும், எனது தாயாரும் குடியிருந்தோமா என்றால் குடியிருந்தோம் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி மோட்டார் ரூமில் 2022 வரை குடியிருந்தோம். மேற்படி புகைப்படம் பி.சா.ஆ.**2**. சர்வே எண்.426 ல் என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் மின் கோபுரம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி புகைப்படம் பி.சா.ஆ.**3**. சர்வே எண்.426 ல் மின் கோபுரம் 2017 க்கு முன்பாகவே ஆரம்பித்துவிட்டார்கள். மின் கோபுரம் அமைத்தால் 2ம் பிரதிவாதிக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று தெரிந்தே நானும், மற்றொரு வாதியான எனது தாயாரும் சேர்ந்து அசல் வழக்கு எண்கள்.123/2018 மற்றும் 132/2020 ஆகிய வழக்குகளை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்ததால் 2ம் பிரதிவாதிக்கு பவர் கிரிட் கார்பரேசனால் வழங்க வேண்டிய தொகையை நிறுத்திவிட்டேன் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி மற்றும் அவரது மகனுக்கும் எழுதி வைத்த உயில் சம்பந்தமாக 2017 ம் ஆண்டுக்குபிறகு தான் பார்த்து தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி மற்றும் மகனுக்கும் எழுதி வைத்த உயில் சம்பந்தமாக இந்த வழக்கிலும் ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு உயில் சாசனம் எழுதி வைக்க உரிமையிருக்கிறது என்றும், அதனால் தான் மேற்படி உயில் ஆவணம் பற்றி இந்த வழக்கிலும் ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்த்தில் தாக்கல் செய்த வழக்கிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பாகபிரிவினை தவிர வேறு எந்த பரிகாரமும் கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**2**ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.